செய்தி வெளியீடு எண்.192 நாள்.28.12.2021

## பத்திரிகை செய்தி

## அலுவலக உதவியாளர் நியமனத்திற்கான அறிவிப்பு

தமிழ்நாடு அரசு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையில் சென்னை மண்டல மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநர் அலுவலகத்தில் காலியாக உள்ள ஒரு அலுவலக உதவியாளர் பணியிடத்தை பொதுப்போட்டி (முன்னுரிமை பெற்றவர்) பிரிவில் கீழ்காணும் தகுதியின் அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. சம்பளம் : Level -1 (ரூ.15,700 – 58,100), தகுதிகள்: எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும், தமிழில் எழுத மற்றும் படிக்க தெரிந்திருக்க வேண்டும், மிதிவண்டி ஒட்டத் தெரிந்திருக்க வேண்டும். வயது வரம்பு : ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் அருந்ததியினர் மற்றும் பழங்குடி வகுப்பினர் (18 முதல் 37 வயது வரை), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட (முஸ்லீம்) வகுப்பினர் (18 முதல் 34 வயது வரை), இதர வகுப்பினர் (18 முதல் 32 வயது வரை) விண்ணப்பிக்க வேண்டும். விருப்பமுள்ள நபர்கள் **10.01.2022** மாலை 5.00 மணிக்குள் பூர்த்தி செய்து விண்ணப்பத்தினை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் விபரங்களுக்கு கீழ்கண்ட முகவரியில் உள்ள மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, இணைஇயக்குநர்(மண்டலம்), சென்னை அலுவலகம், **D.M.S.** வளாகம் மூன்றாம் தளம் தேனாம்பேட்டை, சென்னை –600 006, தொலை பேசி எண்.044–24328596 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம் என சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ஜெ.விஜயா ராணி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை-01.